OS .No. 99 /2019 நாள் : 13.06.2023

## PW1 குறுக்கு விசாரணை (5,7 பிரதிவாதிகள் தரப்பில்)

நான் 9 ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் எனது அப்பாவின் சொத்தில் பங்குவேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பெயர் கணபதி ஆகும், எனது அப்பாவிற்கு என்னென்ன சொத்துக்கள் சொந்தமாக இருந்தது என்பதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் என்னென்ன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் சொல்லமுடியும். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என்னென்ன சொத்துக்கள் என் அப்பாவிற்கு உள்ளது என்று தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் பக்கிரி ஆகும். அவருக்கு 2 ஆண் பிள்ளைகள், 3 பெண் பிள்ளைகளாகும், அவர்களில் ஆண் வாரிசுகள் எனது அப்பா கணபதி, எனது சித்தப்பா நடேசன் ஆவார். பெண் வாரிசுகளின் பெயர்கள் தெரியவில்லை. எனது அப்பா, சித்தப்பாவிற்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்றால் 1992 ல் ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது. 1992 பாகப்பிரிவினையில் பெண்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டதா என்றால் இல்லை. பெண்பிள்ளைகளுக்கு ஏன் பாகம் கொடுக்கவில்லை என்று எனக்கு தெரியவில்லை. 1992 பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். அதன் அசல் என்னிடம்தான் உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை வீட்டிற்கு மட்டும்தான் போட்டுள்ளேன். சர்வே எண்.76/9 ல் வீடு உள்ளது. அந்த புல எண்ணின் விஸ்தீரணம் 10 ¾ செண்ட் ஆகும். வழக்கு சொத்து விவரத்தில் நான்கு சொத்துக்களாக பிரித்து காட்டப்பட்டதற்கான காரணம் என்ன என்றால் வீட்டில் எனக்.கு பங்கு வேண்டும் என்றும், காலி மனையை விற்பனை செய்தது செல்லாது, வடக்குபுறமாக உள்ள மனையை விற்பனை செய்தது செல்லாது, வீட்டின் தாய் சுவற்றை சேதப்படுத்தக்கூடாது என்பதற்காக நான்கு அயிட்டங்களாக பிரித்து காட்டியுள்ளேன். நான் வீட்டில் மட்டும்தான் பங்கு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு நானும், சோமு என்ற சகோதரனும் வாரிசுகளாவோம். எனக்கு 13.07.1973 ல் திருமணம் நடந்தது. திருமணமானதிலிருந்து நான் என் கணவர் வீடான பாண்டிச்சேரியில்தான்

வசித்து வருகிறேன். எனது அம்மா பெயர் பார்வதி ஆகும்., எனது அப்பா 03.08.1998 ல் இறந்து விட்டார். எனது அம்மா 31.12.2001 ல் இறந்து விட்டார். எனது சகோதரர் சோமுவிற்கு திருமணமாகி விட்டது. அவரது மனைவி பெயர் ஜானகி , அவர் 1ம் பிரதிவாதியாவார். 2 முதல் 4 பிரதிவாதிகள் சோமுவின் வாரிசுகளாவார்கள். சோமு 14.08.2004 ல் இறந்து வி-ட்டார் என்றால் சரிதான். எனது அப்பாவின் இறப்பிற்கு பிறகும், எனது அம்மாவின் இறப்பிற்கு பிறகும் சொத்தில் பாகம் கேட்டு ஏதாவது அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. எனது சகோதரர் இறந்த பிறகு சொத்தில் பாகம் கேட்டு ஏதாவது அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் காலஞ்சென்ற சோமுவின் குடும்பத்தின் அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றால் சரிதான். தாவா 4 அயிட்டங்களில் 1 வது அயிட்டமும், 4 வது அயிட்டமும் வீடு என்றால் சரிதான். வீட்டிற்கு வடபுறம் உள்ள கொல்லை 4 வது அயிட்ட சொத்தில் உள்ளது என்றால் சரிதான். 2 மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்கள் காலி மனைகள் என்றால் சரிதான். 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் வீட்டிற்கும், வடபுறம் உள்ள காலி மனைக்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். அது தெற்கு, வடக்காக அமைந்துள்ளது. 2 வது அயிட்ட சொத்து மெயின்ரோட்டிற்கு வடக்கில் உள்ளது என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்தை 2002 ம் ஆண்டு 5 ம் பிரதிவாதியின் கணவர் பாபு என்பவருக்கு சோமு விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். 2 வது அயிட்ட சொத்திற்கு வடக்கில் உள்ளதுதான் 3 வது அயிட்ட சொத்து என்றால் சரிதான். 2006 ம் ஆண்டில் 3 ம் அயிட்ட சொத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் பாபுவிடம் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 2002 ம் ஆண்டில் ஏற்பட்ட பத்திரத்தையும், 2006 ம் ஆண்டில் ஏற்பட்ட பத்திரத்தையும் நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா 1 மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்களை பாபு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 2002 மற்றும் 2006 கிரைய பத்திரத்தை ஆட்சேபித்து அறிவிப்போ, அல்லது வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தம்பியின் வாரிசுகளுடன் நான் இன்று வரை சுமூகமாகத்தான் உள்ளேன் என்றால் சரிதான். எனது தம்பியின் மகன் 2 ம் பிரதிவாதி கார்மேகம் காவல் துறையில் போலீசாக பணிபுரிந்து வருகிறார். 3 ம் பிரதிவாதி சந்திரசேகரன் உள்ளூரில் கூலி வேலை செய்து வருகிறார். 4 ம் பிரதிவாதி லெட்சுமணன் வேன் டிரைவராக பணிபுரிந்து வருகிறார். 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா 1 மற்றும் 4 வது அயிட்ட சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தற்போது தாவா வீட்டில் தங்கிக்கொண்டுதான் வழக்கு நடத்தி

வருகிறேன் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் நான் பங்கு கேட்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் விற்பனை செய்தது குறித்து 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் 2019 ல் தான் கேட்டேன். 2 ம் பிரதிவாதி கார்மேகம் தற்போது நாகூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் சொல்ல காவல் நிலையத்தில் எழுதினார்கள். வா.சா.ஆ.5 புகாரில் உள்ள விவரத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. புகாருக்கு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை. எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரத்தை எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். அதில் சொல்லியுள்ள விவரங்கள் சரியானதுதான் என்றால் சரிதான். எனது வழக்குரையை நான் படித்துப்பார்த்தேன். எனது வழக்குரையில் 5 வது பாராவில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் இருதரப்பையும் அழைத்து விசாரித்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் காவல் நிலையத்திற்கு ஆவணங்களை எடுத்து வந்து காட்டினார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளையும் அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்ததை ஒத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த காலத்திலும் சர்வேயர் வைத்து அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களை 5 ம் பிரதிவாதியான பாபுவின் மனைவி ரெடிமேட் காம்பவுண்ட் சுவர் வைத்து அடைக்க முயற்சி செய்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பாக 2,3, அயிட்ட சொத்துகளுக்கு வேலி இருந்ததா என்றால் இருந்தது. ரெடிமேட் காம்பவுண்ட் சுவர் வைப்பதற்கு நான் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் சேர்ந்துதான் தடுத்தோம். 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் 5 ம் பிரதிவாதி காம்பவுண்ட் சுவர் வைத்ததற்கு ஆட்சேபணை செய்ததற்காக சத்தம் போட்டார் என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதி தாவா சொத்தில் காம்பவுண்ட் சுவர் வைப்பதற்கு சோமுவின் வாரிசுகள் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்வதற்கு பின்னர் என்னை தூண்டிவிட்டு 5 ம் பிரதிவாதி மீது புகார் கொடுக்க வைத்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாதி சொத்து உண்டு என்றால் சரிதான். அந்த சொத்துக்களை 1 முதல் 4 பிரதிவாதிகள் விற்பதற்கு உரிமையில்லை. ஏனென்றால் நான் அதில் கையொப்பம் செய்யவில்லை. 2002, 2006 ம் ஆண்டுகளில் தாவா சொத்துகளை விற்பனை செய்தது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த காலத்தில் பெண்களுக்கு நகை போட்டு திருமணம் செய்து வைத்துவிட்டதால்

ஆண்களுக்குதான் சொத்தில் பாகம் உண்டு என்றும், அவ்வாறு எனது அண்ணன் கொடுக்கப்பட்ட சொத்தில் நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் தாவா சொத்துக்களில் எனது அப்பா, அம்மா , எனது அண்ணன் ஆகிய மூவரும் இறந்த பிறகும் சொத்தில் பாகம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 2,3 அயிட்ட சொத்துக்கள் விற்பனை செய்தது முதல் 5 மற்றும் 7 பிரதிவாதிகளின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வப்போது வந்து செல்வேன் என்றும், தாவா சொத்துக்கள் எனது கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5, 7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள தாய் சுவற்றை இடிக்க முயற்சி செய்வதாக கார்மேகம் தூண்டுதலின்பேரில் பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2019 ல்தான் இடிக்க முயற்சி செய்தபோது தெரிய வந்தததாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, இரண்டு கிரைய ஆவணங்களை ரத்து செய்ய பரிகாரம் கோருவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 5,7 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் 2,3 அயிட்ட சொத்துக்களில் வேலி வைப்பதற்கும், காம்பவுண்ட் சுவர் வைக்கவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கை மதிப்பீடு செய்துள்ள முறை தவறு என்றால் சரியல்ல. அதை எவ்வாறு மதிப்பிட்டுள்ளேன் என்று எனக்கு சொல்ல தெரியாது. இந்த வழக்கில் 1,4, அயிட்ட சொத்துக்களின் மதிப்பீடு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2,3, அயிட்ட சொத்துக்கள் பொறுத்து எனக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்லஎன்றால் சரியல்ல, அதனை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல,

மறு விசாரணை - இல்லை